Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 184

வெள்ளிக்கிழமை
29 மே 2026

வைகாசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

### அரசியல் ஆதாயத்துக்காக ஏனைய கட்சிகளை தொடாது பெரமுன!

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 29
அரசியல் ஆதாயம் பெறுவதற்காக ஏனைய கட்சிகளை உடைத்து எமது கட்சியைப் பலப்படுத்தும் எண்ணம் இல்லை- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். »11



# மயிலிட்டியில் இருந்து இராணுவமே வெளியேறு

### பெரும் போராட்டத்துக்கு இன்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 29
மயிலிட்டியில் பொதுமக்களின் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இன்று மிகப் பெரிய போராட்டமொன்று நடைபெறவுள்ளது. »11

## திஸ்ஸ விகாரையை உடன் அகற்றுங்கள்

### இன்று மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 29
பொதுமக்களின் காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி பொதுமக்களும், காணிகளின் உரிமையா »11

## பாலியல் குற்றங்களுக்கு எதிராக மன்னாரில் போர்

மன்னார், மே 29
சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைக் கண்டித்தும், இந்தக் குற்றங்களுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியும் மன்னாரில் இன்று போராட்டம் நடைபெறவுள்ளது.
பாலியல் குற்றங்களுக்கு »11

### நயினாதீவுக் கடலில் விபரீதம்

## படகு கவிழ்ந்து விபத்து அதிபர் பரிதாபச் சாவு!



யாழ்ப்பாணம், மே 29
கடும் காற்றுக் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய அதிபர் நடராசா மயூரன் (வயது-48) பரிதாபமாக உயிரிழந்தார். »11

## வடக்குக் கடற்பரப்பில் ஆபத்தான காலநிலை!

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 29
காங்கேசன்துறை, மன்னார் உள்ளிட்ட வடமாகாண கடற்பரப்பில் நிலவும் கடும் காற்றுடனான ஆபத்தான காலநிலை இன்றும் தொடரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் வளிமண்டலவி »11

## காய்ச்சல், வலிப்பு; சிசு பரிதாபச்சாவு!

யாழ்ப்பாணம், மே 29
காய்ச்சல் மற்றும் வலிப்புக் காரணமாக பச்சிளம் சிசுவொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.
பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த, பிறந்து 27 நாள்களேயான லோகிதன் கிராஜ் என்ற சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
காய்ச்சல் ஏற் »11

### நெடுந்தாரகை நிலைவரம்
### அமைச்சர் குழு ஆராய்வு

விரிவு பக்கம்:-08

### வடமராட்சி கடற்பரப்பில்

## கடற்றொழிலுக்காகச் சென்ற 4 மீனவர்களைக் காணவில்லை

- தேடுதல் நடவடிக்கைகள் தீவிரம்
- மூழ்கிய நிலையிலுள்ள படகால் பதற்றம்
- கடற்படை அசமந்தப் போக்கு

யாழ்ப்பாணம், மே 29
வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் இருந்து இரண்டு படகுகளில் கடற்றொழில் நடவடிக்கைக்காகச் சென்ற நான்கு மீனவர்கள் காணாமற்போயுள்ளனர். இதையடுத்து அவர்களைத் தேடும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. நடுக்கடலில் படகொன்று வலைகளுடன் மூழ்கிய நிலையில் காணப்படுவதால் அவர்களின் நிலைமை தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. »11



“சண்டை முடிஞ்சு 17 வருசமானாலும் இப்பவும் எல்லாத்துக்கும் நாங்கள் போராடத்தான் வேண்டியிருக்கு கண்டியளோ”

## மதுப்போத்தல்களுடன் நேற்று ஒருவர் கைது!

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மதுப்போத்தல்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு முயன்ற நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹஜ் பெருநாளை »11



## காற்றாலைக்கு எதிராக பூநகரியில் போராட்டம்!

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சி-பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டம், கனிய மணல் அகழ்வு, சுண்ணக்கல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, கிராஞ்சி ஆகிய கிராமங்களிலேயே »11

### பொதிகள் காவுகை சேவையூடாக

## போதைமாத்திரை கடத்தல் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 29
பொதிகளைக் காவுகைசெய்யும் சேவையூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போதை மாத்திரைகள் வருவித்து விற்பனை செய்துவந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொதிகள் மூலம் போதைமாத்திரைகள் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4445 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 27 33 43 70 |
| விரோ எழுத்து | T |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1512 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 47 54 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0471 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 1 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2551 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 27 47 61 70 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6203 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 8 9 7 4 1 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2233 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 23 63 68 69 |
| விசேட எழுத்து | U |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0319 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 18 67 |

# பொருளாதாரம் வளர்வதால் நெருக்கடி நிலை ஏற்படாது!

## கைத்தொழில் அமைச்சர் உறுதி

**கொழும்பு, மே 29**

**நாட்டின் பொருளாதாரம் எதிர்பார்த்ததைவிட வேகமாக வலுவடைந்து வருவதால் மீண்டும் ஒரு அந்நியச்செலாவணி நெருக்கடி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. 2023ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்போது கணிக்கப்பட்ட பொருளாதார முன்னறிவிப்புகளைவிட தற்போதைய நிலை மிகவும் சாதகமாக இருக்கிறது என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- கடந்த காலங்களில் 3.1 சதவீதமாகக் கணிக்கப்பட்டிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, தற்போது 5 சதவீதத்தை எட்டியுள்ளது. அதேபோல் 15 சதவீதமாகக் கணிக்கப்பட்ட ஏற்றுமதிப் பங்களிப்பு தற்போது 17.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 18.2 பில்லியன் டொலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலத்தில் எதிர்மறையாகக் காணப்பட்ட நடைமுறைக் கணக்கு தற்போது நேர்மறையான நிலைக்கு மாறியுள்ளது என்றார். (எ-இ)



# தங்கத்தின் விலையில் வீழ்ச்சி

கொழும்பு, மே 29

தங்கத்தின் விலையில் நேற்றும் வீழ்ச்சி ஏற்பட்டது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3,86,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த நிலையில், நேற்று 3,000 ரூபாவால் குறைந்துள்ளது. நேற்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 383,000 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 352,400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. (எ-இ

# போதைப்பொருள்களுடன் 948 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 29

போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசியத் திட்டத்தின்கீழ் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 948 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து போதைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

588 கிராம் ஹெரோய்ன், 908 கிராம் ஐஸ், 2 கிராம் கொக்கெய்ன், ஒரு கிலோ 678 கிராம் கஞ்சா, 599 கஞ்சாச் செடிகள், 101 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 26 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 2,414 போதைமாத்திரைகள், 74 கிராம் மதனமோதகம் மற்றும் 53 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)





## சட்ட விழிப்புணர்வு முகாம்

மன்னார், மே 29

சட்ட உதவி மற்றும் விழிப்புணர்வு முகாம், மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் மக்கள் எதிர்நோக்கும் சகல விதமான பிரச்சினைகளுக்கும் சட்டத்தரணிகளின் சட்ட ஆலோசனைகள், அரச அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய உதவிகள் வழங்கப்பட்டன. இதில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். நீதி அமைச்சுடன், யு.என்.டி.பி. மற்றும் யுனிசெவ் இணைந்து ஏற்பாடுசெய்த இந்த முகாமுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்கியது. (க-56)

# சிகரெட்டுகளுடன் சீனர்கள் கைது

கொழும்பு, மே 29

கட்டுநாயக்க விமானநிலையத்தில் 27 இலட்சம் ரூபா பெறுமதியான பெருந்தொகையான வெளிநாட்டுச் சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற குற்றச்சாட்டில் சீன நாட்டவர்கள் 14 பேர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் இலங்கை வந்துள்ளனர் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சீனாவில் தயாரிக்கப்பட்ட 138,200 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0911 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 4 0 8 8 5 6 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3177 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 01 09 47 75 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 14 45 54 74 |
| வெற்றி வாரம் | 5338 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 1007 |
| வெற்றி இலக்கம் | 12 36 43 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 02 16 18 34 |
| சீட்டிழுப்பு வாரம் | 4889 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கம் | 02 09 55 72 |
| வெற்றி வாரம் | 2353 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 28.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 08 36 45 72 |
| வெற்றி வாரம் | 3003 |



# 515 தாதியர்களுக்கு இன்று நியமனம்

கொழும்பு, மே 29

இலங்கையின் இலவச சுகாதாரசேவையின் மனித வளம் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும்நோக்கில், அறிவியல் துறை சார்ந்த பட்டப்படிப்பை நிறைவுசெய்த 515 தாதியர்களுக்கு, தாதிய தரம்-IIIக்கான நியமனங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

மத்திய அரசின் மேற்பார்வையின்கீழ் இயங்கும் பிரதான மருத்துவமனைகள் மற்றும் போதனா மருத்துவமனைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அறிவியல் பிரிவில் மூன்றாம் நிலை பதவிகளுக்கான தாதியர் பட்டதாரிகளின் இறுதியான ஆட்சேர்ப்பு 2021ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது. சுமார் ஐந்து ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்த ஆட்சேர்ப்பு மீண்டும் நடைபெறுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




### காணாமல் ஆக்கப்பட்டோரின்

# குடும்பங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை நிறுத்தவில்லை

## ஓ.எம்.பி. அலுவலகம் விளக்கம்

**கொழும்பு, மே 29**

**காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளைக் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் நிராகரித்துள்ளது.**

வருடாந்த பாதீட்டுத்திட்டம் மற்றும் நிர்வாக ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, காணாமல் போனோர் தொடர்பான நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் இந்த ஆண்டு 370 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக இதற்கு முன்னர் ஒதுக்கப்பட்டிருந்த 10 மில்லியன் ரூபா நிதி நிறுத்தப்பட்டுள்ளதாக, 'காணாமல் போனவர்களின் குடும்பங்கள்' அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகளையடுத்தே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளதாவது- மூலதனச் செலவுகள் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் பாதீட்டுத்திட்டத்தின் ஊடாகத் தனியாக வழங்கப்படுகின்றன. அதேநேரம், இந்த 370 மில்லியன் ரூபா ஒதுக்கீடானது காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காகவே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணக் கொடுப்பனவு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படும் தற்காலிகக் கொடுப்பனவு மட்டுமே. தங்களது அன்புக்குரியவர்களை இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் முறையான இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்காகவே தற்போது இந்தத் தனிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான 6,700 காணாமற்போன சம்பவங்கள் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் இதுவரை தொடர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. தற்போது 4,700 குடும்பங்கள் இந்த இடைக்காலக் கொடுப்பனவைப் பெறுகின்றன- என்றார். (எ-இ)

# பிறந்து 20 நாள்களான சிசு ரூ.1 இலட்சத்துக்கு விற்பனை

## தாயும் வாங்கியவரும் கைது

புத்தளம், மே 29

பிறந்து 20 நாள்களான சிசுவை, ஒரு இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில், இளம் தாய் ஒருவரும், அந்தச் சிசுவை விலைக்கு வாங்கிய பெண்ணும் புத்தளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குடும்ப வறுமை காரணமாகவே தனது சிசுவை விற்றதாகத் தாயார் தெரிவித்துள்ளார். அத்துடன் சிசுவை விலைக்கு வாங்கிய பெண், திருமணம் முடிந்து 18 வருடங்களாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர் என்பது பொலிஸ் விசாரணைகளின்மூலம் தெரியவந்துள்ளது. நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி, ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் போது நீதிமன்ற அனுமதியுடன் கடுமையான சட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் சட்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். எனினும், அத்தகைய எந்தவொரு சட்ட நடைமுறைகளையும் பின்பற்றாமல், சட்டத்துக்கு முரணானவகையில் பணப்பரிமாற்றத்துடன் குழந்தை கைமாற்றப்பட்டுள்ளது. அதனால் சட்டவிரோதக் குழந்தை விற்பனை மற்றும் கடத்தல் குற்றச்சாட்டுகளின்கீழ் இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)



# நீரில் மூழ்கி இளைஞர் சாவு

மட்டக்களப்பு,மே 29

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வாவிக்குள் வீழ்ந்ததில், இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு, புதூர்ப்பகுதியில் உள்ள விமானப்படை முகாமுக்கு முன்னால் உள்ள வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு, திருப்பெருந்துறை 4ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கதிர்செல்வன் பரமநாதன் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (க-இ)

# கைதியுடன் கைபேசி உரையாடல்; ரஹ்மான் எம்.பி.யிடம் விசாரணை



கொழும்பு, மே 29

போகம்பரைச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலிலுள்ள கைதி ஒருவருடன் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானிடம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர், கைதியுடன் 53 தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சந்தேக நபர் பாரதூரமான குற்றங்கள் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுகளின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு, சுமார் 4 மணித்தியாலங்கள் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# இன்னொரு காரணம்!

புங்குடுதீவு வித்தியா கொலை வழக்கில மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருத்தர் போனகிழமை ஜெயிலுக்குள்ள பிழையான முடிவெடுத்துச் செத்த உடன 'சுவிஸ்குமார் தான் செத்திட்டான்' எண்டு எல்லா இடமும் ஒரு செய்தி பரவிச்சுது. ஆனால் அது உண்மையில்லை. அண்டைக்குச் செத்தவரின்ர பேரும் குமார் எண்டுதான் முடியுது. ஆனால் அவர் சுவிஸ் குமார் இல்லை, இவர் ஜெயக்குமார். அதைவிட இந்தக் கொலைவழக்கில பிடிபட்ட இன்னொருத்தரும் கொஞ்சக்காலத்துக்கு முதல் வருத்தம் வந்து ஜெயிலுக்க செத்தவர். அவரின்ர சகோதரன் தான் இப்ப பிழையான முடிவெடுத்து உயிரை மாய்ச்சவர். இப்பிடி அந்தக் கேஸில பிடிபட்ட ரண்டுபேரின்ர உயிரையும் வித்தியாவின்ர ஆவிதான் பழிவாங்கி எடுத்தது எண்டும் எங்கட ஆக்கள் கதைக்க வெளிக்கிட்டினம். அதோட இப்ப செத்தவரின்ர சாவில சந்தேகம் இருக்கெண்டும், என்னெண்டு அவருக்கு ஜெயிலில தூக்குப்போட கயிறு கிடைச்சதெண்டும், ஏன் அவரின்ர 'பொடியை' வெளியால கொண்டந்து எரிக்காமல் அரசாங்கமே உள்ளுக்காலை எரிச்சது? எண்டும் ஆளாளுக்குத் தங்களுக்கு என்ன மனசில படுகுதோ அதை வாய்க்கு வந்தபடி அடிச்சுக் கொண்டிருக்கினம்.

உண்மையில ஜெயிலில மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆக்களைத் தனிச்சிறைக்குள்ள தான் வைச்சிருப்பினம். அவையளை மற்றக் கைதியள் மாதிரி கும்பலோட கோவிந்தாவா சேர்ந்திருக்க விடாயினம். அப்பிடித் தனிச் 'செல்லுக்க' இருக்கேக்கதான் அந்தக் கைதி பிழையான முடிவை எடுத்திருக்கிறார். அந்தச் செல்லுக்குள்ள காத்து வாறதுக்கெண்டு சுவரின்ர மேல்பக்கத்தில, நல்ல உயரத்தில யன்னல் மாதிரி ஒரு செட்டப் இருக்குது. அதில ஏறி, தான் கட்டியிருந்த சாறத்தை கயிறுமாதிரி கழுத்தில கொழுவிப்போட்டு, ஆள் அப்பிடியேகீழ பாய்ஞ்சுதான் உயிரை மாய்ச்சிருக்கு. விடியப்பிறம் கைதியளை பெரிசாக் கண்காணிக்கிறேலை. அந்த ரைமைப் பார்த்துத்தான் இந்த வேலையை அவர் செய்திருக்கிறார்.

அவரின்ர பொடியை பொலிஸ்காரரோ, சிறைச்சாலை நிர்வாகமோ களவா ஆருக்கும் தெரியாமல் எரிக்கேலை. ஜெயில் வழக்கப்படி அவரின்ர பொடியை வீட்டுக்காரரிட்டத்தான் குடுக்கக் கூப்பிட்டவை. ஆனால் 'இப்ப இந்த பொடியைக் கொண்டுபோய் செத்தவீடு செய்யிற அளவுக்கு என்னட்ட வசதி இல்லை' எண்டு அவரின்ர மனுசி மாட்டன் எண்டதாலதான் , பிறகு அரசாங்கச் செலவில எரிச்சிருக்கினம். அவரின்ர மனுசி பொடியை வாங்காததுக்கு இன்னொரு காரணமும் இருக்காம். வித்தியா கொலை வழக்குக்குப் பிறகு இவையின்ர குடும்பத்தோட அங்கத்தைச் சனம் நல்லமாதிரி இல்லை. இப்பதான் நடந்ததை எல்லாரும் மெல்ல மெல்ல மறந்துகொண்டு வருகினம். அப்பிடியான நேரத்தில இந்தாளின்ர பொடியை புங்குடுதீவுக்குக் கொண்டுபோய் எரிச்சால் அதால தேவையில்லாம பழைய விசயங்கள் எல்லாம் கிளறுப்பட்டு, செத்தவரின்ர குடும்பத்தில மிஞ்சியிருக்கிறவைக்குச் சிக்கலாப் போடும். அதால தான் இஞ்சையே வைச்சு எரிக்கச் சொல்லியிருக்கினமாம். செய்யக்கூடாத குற்றத்தைச் செய்தால் இப்பிடிச் செத்தாலும் கிடந்து அலங்கோலப்படவேண்டிவரும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இனப்படுகொலை நினைவுத்தூபி முள்ளிவாய்க்காலில் அமையும்!

## கஜேந்திரகுமார் எம்.பி. உறுதி!

யாழ்ப்பாணம், மே 29

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையை நினைவுகூர்ந்து, இனப்படுகொலை நினைவுத்தூபி, அந்த மண்ணில், தமிழ்மக்களுடன் இணைந்து அமைக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு கிழக்கைச்சேர்ந்த அனைத்து ஆயர்களும் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது ஒரு இன அழிப்பு என்பதை 2022ஆம் ஆண்டு ஏகமனதாக வெளிப்படுத்தியிருந்தனர். தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்ந்தது ஓர் இனப்படுகொலை. சிங்களப் பேரினவாத அரசால் தமிழ் மக்கள் வரலாற்று ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள கத்தோலிக்க அருட்தந்தை ஜீவந்தா பீரிஸ் முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அவரது கருத்துக்களைக் கொச்சைப்படுத்தி, அவரது பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கும்வகையில் கத்தோலிக்கத் திருச்சபை செயற்படுவது மிகவும் பொருத்தமில்லாத தொரு செயல். இலங்கையில் உயிர்த்த ஞாயிறு படுகொலைத் தாக்குதல் சம்பவம் நடந்த பின்னர், சர்வதேசக் குற்றவியல் விசாரணை அவசியம் நடாத்தப்படவேண்டும் என்று கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு மறை மாவட்டப் பேராயர். மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்திருந்தார்.

அதேநேரம் தமிழ்மக்கள் மீதான இன அழிப்புக்கும் ஒரு சர்வதேசக் குற்றவியல் விசாரணை என்பது தவிர்க்கமுடியாதது. இதுதொடர்பான கோரிக்கையை மல்கம் ரஞ்சித் ஆண்டகை இதுவரை முன்வைக்காமலிருப்பது கத்தோலிக்கத் திருச்சபையை நேசிக்கும் தமிழ்மக்கள் உட்பட ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் மிகப்பெரிய ஏமாற்றத்தையளித்துள்ளது. எனவே இந்த விடயத்தைக் கத்தோலிக்கத் திருச்சபை மீள் பரிசீலனை செய்யவேண்டும்- என்றார். (க-66)

# வீடுடைத்து கவரிங் நகையுடன் உணவுப்பொருள்களும் திருட்டு

யாழ்ப்பாணம், மே 29

வீடுடைத்து தங்க ஆபரணங்களுடன், கவரிங் நகை மற்றும் உணவுப்பொருள்களும் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத் துக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

வீட்டார் மகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக கொழும்புக்குச் சென்றிருந்த நிலையில், வீட்டை உடைத்து மிளகாய்த்தூள், சரக்குத்தூள், பயிற்றம் உருண்டைகள், 3 கோழிகள், கால் பவுண் தோடு, ஒரு மூக்குத்தி, ஒரு தொகை பணம் மற்றும் கவரிங் அட்டியல் என்பன திருடப்பட்டுள்ளன. கொழும்பு சென்றவர்கள் வீடு திரும்பியபோது வீட்டில் திருட்டு இடம்பெற்றதை அறிந்தனர். இதனையடுத்து வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தனர். (க-27)

# முதியோர் கொடுப்பனவு இன்று வங்கிகளில் வைப்பு

கொழும்பு, மே 29

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின்கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான மே மாதத்துக்கான கொடுப்பனவு, இன்று பயனாளிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின்கீழ் தகுதி பெற்ற சுமார் 7 இலட்சம் முதியவர்களுக்கான நிதியை அரசாங்கம் விடுவித்துள்ளது. அனைத்துப் பயனாளிகளும் தமக்குரிய முதியோர் கொடுப்பனவை இன்று முதல் தமது வங்கிக்கணக்கின் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (க-இ)

# அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், மே 29

மூளாய் கிழக்குப்பொற் புலம்பதி அருள்மிகு ஸ்ரீ மஹா காளியம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் நேற்று முன்தினம்புதன்கிழமை ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஜீன் மாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெற்று உற்சவம்நிறைவு பெறும். உற்சவ காலங்களில் தினமும் காலை 10.30மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடுகளும் மாலை 7மணி முதல் விசேடபூஜையும், வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்று அம்பாள் திருவீதியுலா வரும் வைபவம் நடைபெறும். (எ-41)



உலக வாழ் இஸ்லாமியர்கள் நேற்றுப் புனித ஹஜ் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் நிலையில் மன்னார் மாவட்ட இஸ்லாமியர்களும் ஹஜ் பெருநாளைக் கொண்டாடினர். நேற்றுக் காலை 6.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகை இடம்பெற்றது. தொடர்ந்து. 'இறைத்தூதரின் தியாகம்' எனும் தலைப்பில் பெருநாள் பிரசங்கம் இடம் பெற்றது. (எ-56)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான்முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். கணவன் – மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**மீனம்:** வெளியூர்ப் பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## நடக்குமா? நடக்காதா?

அரசாங்கத்தின் முக்கியமான இருவரின் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பரஸ்பர முரணான கருத்துகள், மாகாணசபைத் தேர்தல் இனி நடத்தப்படுமா? என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கின்றன. அமைச்சரவைப் பேச்சாளர் ஒரு புறமும், அரசாங்கத்தை இயக்கும் அரசியல் சக்தியின் முக்கியமான புள்ளி மறுபுறமும் முரண்பட்ட கருத்துகளை வெளியிடுவது, மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவ தில் அரசாங்கத் துக்குள் இருக்கும் 'உள்மன விருப்பத்தையே' அப்பட்ட மாகக் காட்டுகிறது என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது.

தேர்தல் முறைமை தொடர்பான சட்டரீதியான சிக்கல்கள் தீர்க்கப்பட்டால், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் எந்தவிதத் தடையும் இல்லை என்றும், அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதால் நிதிப்பிரச்சினை ஏதுமில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். ஆனால், இதற்கு முற்றிலும் மாறான ஒரு கருத்தை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளிப்படுத்தியுள்ளார். சட்டப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல்நடக்க வாய்ப்பில்லை என்று கூறியுள்ள ரில்வின் சில்வா, அதற்கு அனர்த்த முகாமைத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டைக் காரணமாகக் காட்டியுள்ளார். நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க, தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 500 பில்லியன் ரூபாவைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கை வகுப்பிலும் தீர்மானங்களிலும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது என்பது இரகசியமல்ல. அந்தவகையில் ரில்வின் சில்வாவின் கருத்தை ஒதுக்கிவிட்டுச் செல்லமுடியாது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம் என்று வாக்குறுதி வழங்கி ஆட்சிக்குவந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தேர்தலை நடத்துவதில் எந்தவிதமான சிரத்தையும் காட்டுவதாக இல்லை. மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு விசேட குழு நியமிக்கப் பட்டிருந்தாலும், அதன் பணிகள் ஆமைவேகத்திலேயே நடக்கின்றன. மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் காட்டும் இந்த அசிரத்தை, மாகாணசபை முறைமையின் மீது ஜே.வி.பி. கொண்டுள்ள பாரம்பரிய அரசியல் வெறுப்பின் வெளிப்பாடா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்கமுடியாதிருக்கின்றது.

தேர்தல் என்பது அரசாங்கம் மக்களுக்கு வழங்கும் சலுகையல்ல; அது மக்களின் அடிப்படை ஜனநாயகம் மற்றும் மாகாண ரீதியிலான அதிகாரப் பகிர்வுடன் தொடர்புடைய சட்டரீதியான உரிமையாகும். இலங்கையில் மாகாணசபைகள் இயங்காதிருப்பது உண்மையில் மக்களின் உரிமைகளை மீறும் செயற்பாடாகும். தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, அதிகாரக் கட்டிலில் ஏறிய பின்னர் மறப்பது அல்லது தட்டிக்கழிப்பது தற்போதைய அரசாங்கத்திற்கும் முந்தைய ஆட்சியாளர்களுக்கும் இடையில் எந்தவொரு கொள்கை ரீதியான வேறுபாட்டையும் காட்டப்போவதில்லை.

மக்களின் பேராதரவுடன் ஆட்சிக்குவந்த ஒரு அரசாங்கம், பேரிடர்களையும் சட்டச்சிக்கல்களையும் காரணம்காட்டி மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒத்திவைக்க முயல்வது தார்மீக ரீதியாக ஏற்புடையதல்ல. சாக்குப்போக்குகளைக்கூறி காலத்தைக் கடத்தாமல், சட்ட மற்றும் நிதிப் பிரச்சினைகளை விரைந்து தீர்த்து, மாகாணசபைத் தேர்தலை உடனடியாகநடத்துவதே அரசாங்கம் மக்கள்மீது கொண்டுள்ள நம்பகத்தன்மையைக் காப்பதற்கான ஒரே வழியாகும்.






### பொய்யாமொழி

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

**பொருள்:** காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும்; காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.



## முறைசாராத் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்கத்திட்டம்




**கொழும்பு, மே 29**

**இலங்கையிலுள்ள முறைசாராத் துறையைச் சேர்ந்த சுமார் 6 மில்லியன் ஊழியர்களில், குறைந்தபட்சம் 5 மில்லியன் ஊழியர்களையாவது இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்துக்குள் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைச்சின் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது-

அரச துறை ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளும், தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி நன்மைகளும் மற்றும் விவசாயிகளுக்கு விவசாய ஓய்வூதியத் திட்டமும் நடைமுறையில் உள்ளன. இந்தத்தரப்பினரைத் தவிர, சுமார் 6 மில்லியன் மக்கள் முறைசாரா வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை சமூக ப் பாதுகாப்புச் சபை அவர்களில் சுமார் 3 மில்லியன் பேரை ஏற்கனவே இதில் பதிவுசெய்துள்ளது. எனினும், தற்போது சுமார் 1.6 மில்லியன் உறுப்பினர்கள் மட்டுமே முறையாகப் பங்களிப்புப்பணத்தைச் செலுத்தி வருகின்றனர். எமது திட்டம், இந்த ஓய்வூதியக் காப்புறுதியைக் குறைந்த பட்சம் 5 மில்லியன் முறைசாரா துறை ஊழியர்களுக்காவது விரிவுபடுத்துவதாகும்-என்றார். (எ-இ)

## 7 இலங்கையர் நாடு கடத்தல்

கொழும்பு, மே 29

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி பாதுகாப்புப் பிரிவினரால், நாடு கடத்தப்பட்ட இலங்கையர் 7 பேரும் நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான ட்ரோன் விமானங்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக் காட்சிகளைத் தங்கள் வசம் வைத்திருந்ததுடன், அவற்றைச் சமூக ஊடகங்களில் பதிவிட்ட குற்றச்சாட்டில், அபுதாபி பாதுகாப்புப் பிரிவினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் அம்பலாங்கொடை, மாரபன, பொரளை, பண்டாரகம, பொலநறுவை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வத்திக்கானுக்கு புதிய தூதுவர்

கொழும்பு, மே 29

ஜெனீவாவுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதித் தூதுவர் சுமித் தசநாயக்க, ஜெனீவாவில் வசித்தவாறே வத்திக்கானுக்கான இலங்கையின் அடுத்த தூதுவராகப் பணியாற்றவுள்ளார். இவர் வத்திக்கான் அப்போஸ்தலிக் அரண்மனையில் பாப்பரசர் 14ஆம் லியோவிடம் தனது சான்றாதாரப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளார். இதன்போது இலங்கைக்கும், வத்திக்கானுக்கும் இடையே நிலவும் நீண்டகால நட்பு உறவுகளை நினைவு கூர்ந்த தூதுவர் சுமித் தசநாயக்க, 2027ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால், பாப்பரசருக்கு ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ள அழைப்பை மீண்டும் நினைவுபடுத்தினார். (க-இ)

## சிவனொளிபாதமலை யாத்திரை நிறைவு

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம், நாளை 30ஆம் திகதி பௌர்ணமி தினத்துடன் நிறைவடையவுள்ளது. யாத்திரை காலம் நிறைவடைந்ததும், சிவனொளிபாதமலை உச்சியில் வைக்கப்பட்டுள்ள புனித சர்வஞ்ஞ தாதுக்கலசம், சுமன சமன் தெய்வத்தின் திருவுருவச் சிலை உள்ளிட்ட தெய்வீக ஆபரணங்கள் நாளைமறுதினம் 31ஆம் திகதி மீண்டும் கல்பொத்தாவெல ரஜமகா விகாரைக்கு எடுத்துச் செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வனாத்தவில்லுப் பிரதேசசபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்

வனாத்தவில்லுப்பிரதேசசபையை, ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. இடைக்காலத் தடை உத்தரவின் காரணமாக முன்னதாக இடைநிறுத்தப்பட்டிருந்த, வனாத்தவில்லு பிரதேசசபைக்கு, தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில், பொது எதிர்க்கட்சியின் ஆதரவுடன் 2 மேலதிக வாக்குகளைப் பெற்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதியான வின்சன் பிரான்சிஸ் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து 11 மேலதிக வாக்குகளைப் பெற்று, பொது எதிர்க்கட்சி சார்பில் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் துசித லக்மால் உப தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-இ)

**நாளை** சனிக்கிழமை- வைகாசி 16
30.05.2026
சுபநேரம் : 02.52 – 04.22
ராகுகாலம் : 08.52 – 10.22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்துக!



## எதிர்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்து

**கொழும்பு, மே 29**

**மாகாணசபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் கட்டாயம் நடத்தவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிரணிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.**

எதிரணிகள் இணைந்து கொழும்பில் நேற்றுமுன்தினம் விசேட ஊடக சந்திப்பை நடத்தின. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட மேலும் சில கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் அமைச்சர்களான ஜிஎல் பீரிஸ், நிமல் சிறிபாலடி சில்வா, ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்ன உள்ளிட்டோரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், லசந்த அழகியவன்ன, சமன் ரத்னபிரிய, வடிவேல் சுரேஸ் உள்ளிட்டவர்களும் ஊடக சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அரசியற் பிரதிநிதிகள், இவ்வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினர். மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாது என ஜே.வி.பி. செயலாளர் கூறியது ஜனநாயக விரோதம் எனவும் சுட்டிக்காட்டினர். அங்கு கருத்து வெளியிட்ட சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், "மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது எனக்கூறும் அதிகாரம் கட்சிச் செயலாளருக்குக் கிடையாது. எனவே, தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தத்தை உடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றித் தேர்தலை நடத்துமாறு எதிரணிகள் ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றன."என்றார். (எ-44)

## மாகாணசபைத் தேர்தலுக்கு கூட்டு வேட்பாளர் பட்டியல்

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 29

மாகாணசபைத் தேர்தலுக்காக எதிரணிகள் கூட்டு வேட்பாளர் பட்டியலையே தயாரித்து களமிறங்கவேண்டும். வடக்கிலுள்ள கட்சிகளும் அதே வழிமுறையை பின்பற்றவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாகவே மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. எனவே, மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் விரைவில் நடத்தவேண்டும். எதிரணிகள் பொதுக் கூட்டு வேட்பாளர் பட்டியலை முன்வைக்கவேண்டும். இதற்கு வர மறுக்கும் தரப்புகளை துரோகிகளாகவே கருத நேரிடும். கூட்டணி எல்லாம் தேவை இல்லை. கூட்டுறவுத் தேர்தலில்போன்று பொதுப் பட்டியலை முன்வைத்துக் களமிறங்கலாம். வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளாலும் இதனைச் செய்யக்கூடியதாக இருக்கும்-என்றார். (எ-44)





## மாகாணசபைத் தேர்தலுக்காக வடக்கு, கிழக்கு அழுத்தம் தேவை

### இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்து

கொழும்பு, மே 29

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வடக்கு, கிழக்கில் இருந்து ஆதரவு குரல் வலுப்பெறவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இ.தொ.கா.வின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைத் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படமாட்டாது என ஜே.வி.பி.யின் செயலாளர் தெரிவித்துள்ளார். இது அவரின் தனிப்பட்ட கருத்தாக இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் அரசாங்கத்தின் தீர்மானமாக இருந்தால் அது ஜனநாயகத்துக்கு எதிரான அறிவிப்பாகும்.

தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவே அதிகாரபூர்வமாக முடிவுகளை எடுக்க வேண்டும். இதற்கமைய மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. மாகாணசபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்படவேண்டும். இதற்கான அழுத்தங்கள், கோரிக்கைகள் வடக்கு, கிழக்கில் இருந்தும் வலுபெறவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சிசபைத் தேர்தல் தொடர்பில் கேள்வி எழுப்பியவர்கள், இன்று மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஏன் கேள்வி எழுப்புவதில்லை-என்றார். (எ-44)

## அரசாங்கத்துக்குள் பிளவு அதனாலேயே புதிய சட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 29

அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. எனவேதான் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏனைய கட்சிகளில் இணைவதைத் தடுக்கும் நோக்கில் கட்சி தாவினால் பதவி பறிபோகும் சட்டவரைவு அவசரமாக கொண்டுவரப்படுகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தின் தற்போதைய பயணம் தவறு என்பது திசைக்காட்டியிலுள்ள கல்விப் பின்புலம் உடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாக புரிகின்றது. இவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக கருத்துகளை வெளியிடக்கூடும், ஏனையக் கட்சிகளுக்குக் செல்லக் கூடும். ஆகவேதான் அவர்களை பலவந்தமாக அரசாங்க பக்கம் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில், கட்சி தாவினால் பதவியை பறிக்கும் சட்டவரைவு கொண்டுவரப்படுகின்றது.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட்டால் அதை எதிர்கொள்வதற்கு நாம் தயார்என்றார். (எஇ)

## தீவுப்பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு திணைக்களங்கள் முன்னுரிமை அளிக்கவேண்டும்

### ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 29

யாழ். மாவட்டத்தின் கடல் கடந்த தீவுகள் தொடர்பில், திணைக்களங்கள் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும். குறிப்பாக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்வகையில் எடுக்கப்படும் தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

தீவகப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட கலந்துரையாடல், வேலணை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் ஆளுநர் மேலும் தெரிவிக்கையில் கடல் கடந்த தீவகப் பிரதேசங்கள் தொடர்பில் விசேடமானதொரு கண்ணோட்டம் அவசியம். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உடனடியாக சில தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்களை உரிய திணைக்களங்கள் எவ்வித காலதாமதமுமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும். மீண்டுமொரு முறை மீளாய்வு செய்யும் நிலைமையை உருவாக்கக்கூடாது-என்றார்.

தொடர்ந்து கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவிக்கையில், கூட்டங்களில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும் விடயங்கள் திணைக்களங்களால் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. எனவே, திணைக்களங்கள் இதனைக் கருத்திற்கொண்டு, இங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை உடனடியாகச் செயற்படுத்தவேண்டும்.

தீவகப் பிரதேசங்களிலிருந்து மக்கள் இனியும் இடம்பெயரக்கூடாது எனில், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்-என்றார். (க-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எபோலாவுக்கு எதிராக ரஷ்யத் தடுப்பூசி தயார்

எபோலா வைரஸின் புதிய திரிபுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர் என்று தென்னாபிரிக்காவில் உள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது. கொங்கோ ஜனநாயகக் குடியரசில் பரவிவரும் புந்தி புக்யோ வகை எபோலா வைரஸுக்கு எதிராகவும் இந்தத்தடுப்பூசிபாதுகாப்பு அளிக்கக்கூடும் என ரஷ்ய சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ தெரிவித்துள்ளார். (எ-இ)


## நெஞ்சம் கனத்த இதயத்துடன் 10வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**நாகரத்தினம் கணேஸ்வரி (தேவி)**

திதி: வளர்பிறை (திரியோதசி) 29.05.2026

| மண்ணுலகில் அவதரித்த நல்லநாள் | விண்ணுலகை சென்றடைந்த இறுதிநாள் |
|---|---|
| 20.10.1950 | 19.05.2016 |



ஈரைந்து மாதங்கள்
கருவில் எமைச் சுமந்து
உதிரமதை பாலாக்கி எமக்களித்து
நோய் நொடிகள் அண்டாது
எமைகாத்த அன்னையே

பாசமதை காட்டியே
உறவுகளை தன்னிடத்தே ஈர்த்தவளே
பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி
சகோதரங்களுக்கும் அன்னையானவளே.

பாரினில் நாம் சிறக்க
பகல் இரவாய் பாடுபட்டவளே
பண்புடனே நாம் வளர
அறிவுரைகள் பல பகிர்ந்தவளே

எமை ஆளாக்கி விட்டு
இன்னும் சிலகாலம்
எங்கள் அன்பில் வாழ்ந்திடாமல்
பரமன் பாதம் சரணடைந்து
பத்தாண்டுகள் ஓடி மறைந்ததுவே
இன்னும் எத்தனை ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எமைவிட்டு விலகாது எம் தாயே...

கனத்த இதயத்துடன்
உங்கள் பிரிவால் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், உற்றார்,
உறவினர்கள்.

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
077 689 6938

(CS/61499) J-1





## 2026 ஆம் ஆண்டுக்கான உயர் திருவிழாக்காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடைதேங்காய் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2026 ஆம் ஆண்டின் உயர்திருவிழா 15.06.2026 திகதியன்று ஆரம்பமாகி 30.06.2026 ஆம் திகதியன்று நிறைவுபெறுவதற்கு திருவருள் பாலித்துள்ளது.

இக் காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக் காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும் உடைதேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 31.05.2026 ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம்பெறும் ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

1. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
2. தேனீர்க் கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. ஏலத்தில் முதல் நிலைபெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். மிகுதித்தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாக செலுத்தி முடிக்க வேண்டும்.

**அன்னையின் சேவையில்**
**திரு.க.ஜீவசீலன்**
**கௌரவ செயலாளர்**
**அறங்காவலர்சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு.**

(cr.477611) N-1



UNIVERSITY OF JAFFNA

## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.SC. HONOURS IN AGRICULTURE (2024/2025)

Applications will be entertained by the Office of the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Programme to follow B.Sc.Honours in (Agriculture) as internal students for the Academic Year 2024/2025

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   **AND**

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms and other details will be available in the **website: https://www.jfn.ac.lk/ and www.agri.jfn.ac.lk**. Downloaded application forms should accompany with the paid bank slip for deposit of a sum of Rs 100/= credited to the **Peoples' Bank Reference No: 7267502501501683** of Bursar, University of Jaffna. Furthermore, applicants are also required to fill out the Google Form (https://docs.google.com/forms/d/e/1FAIpQLSfTGyVUO1lIjww-zJ90uq2PcMrUOwMIO-iF8b2LL151NvaAFQ/viewform?usp=header).

**Closing date**: Applications should reach us **on or before: 15.06.2026**

Duly completed application forms along with payment receipt and relevant documents should be sent through the relevant Heads of Department to Assistant Registrar, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi by registered post, indicating **"Application for Admission of Public Officers for Degree programme B.SC Honours in Agriculture – 2024/2025"** at the top left-hand corner of the envelope.

Applicants may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for written test and an oral examination, if the application channeled through the Head of the Department is not received. Illegible and incomplete applications and applications received after the closing date will be rejected without intimation.

Eligible candidates will be invited to attend for a Written Test and an Oral Examination.

REGISTRAR
29.05.2026

(cr.47584) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation for Bids (IFB)

## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA

## Rural bridge development project -2026

(1) The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work listed in the table below.

| S.No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period | Non-refundable amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | | |
| 1 | NP/VCKPS/VCKPS/RBDP/D1/2026/01 | RBDP | Construction of Kristhavakulam Small Bridge – 4.00Mn | 3.26 | C8 & above (highway) | 33,000.00 | 01.09.2026 | 84 | 3000.00 |

(2) Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

(3) Interested eligible bidders may obtain further information from Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachi Road, Cheddikulam .

(4) Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the "Schedule" of the Procurement Document for work .

(5) A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddikulam. from 29.05.2026 until 15.06.2026 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of the non-refundable fee specified in the table above. The method of payment will be by cash.

(6) Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 16th June 2026 and 14.00 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

(7) All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

(8) The pre-bid meeting will be held on 08.06.2026 at 14.00 Hrs at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
[Telephone No: 024 2260914 Fax No: 024 2260913]
29.05.2026

(cr.47605) (N-1)

# கேள்வி அறிவித்தல்

## PSDG (Maintenance) & Council Fund - 2026

## நானாட்டான் பிரதேச சபை

1. தலைவர், பிரதேச பெறுகைக்குழு (Div.PC)/ உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு (LAPC) நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகமையுடைய கேள்வியாளர்களிமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.
2. இது தொடர்பான மேலதிக தகவல்களை, நாடளாவிய ரீதியில் பிரசுரிக்கப்பட்ட 2026.05.28 ஆந் திகதிய தினக்குரல் தினசரி பத்திரிகையின் 11 ஆம் பக்கத்தில் பார்வையிடலாம்.
3. மேலும் தலைவர், நானாட்டான் பிரதேசசபை, நானாட்டான் பிரதான அலுவலகத்தில், அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் முறைகள் ஊடாகவோ எம்மை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.


| No | Contract No. | Name of the Contract | Estimated civil Cost (LKR in Mn) Without VAT | CIDA Required | | Required Bid Security | | Contract Period days | Bid Validity Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Specialty | Grade | Amount (Rs.) | Validity Period | | |
| PSDG(Maintenance) 2026 (Works) | | | | | | | | | - |
| 01 | NP/14/42/(6)/PSDG/2026/Maint/01 | Renovation of Murunkanpiddy Murunkan Road | 3.80 | High way Construction | C9 & above | 38,000.00 | 2026.08.28 | 98 | 2026.07.31 |
| 02 | NP/14/42(6)/PSDG/2026/Maint/02 | Renovation of Umanagari Achchankulam Road | 2.50 | High way Construction | C9 & above | 25,000.00 | 2026.08.28 | 98 | 2026.07.31 |
| PSDG 2026 (Supplying & Installing) | | | | | | | | | |
| 03 | NP/14/42(6)/PSDG/2026/08 | Installation of R.O Plant Unit at Vankalai | 1.76 | Registered Supplier | | 18,000.00 | 2026.08.28 | 49 | 2026.07.31 |
| 04 | NP/14/42(6)/PSDG/2026/09 | Installation of R.O Plant unit at Murunkan | 1.85 | Registered Supplier | | 19,000.00 | 2026.08.28 | 49 | 2026.07.31 |
| Council Work - 2026 | | | | | | | | | |
| 05 | NP/14/42(6)/CF/2026/01 | Balance Work of Iraddaikkulam Shopping Complex | 1.59 | Building Construction | C9 & above | 16,000.00 | 2026.08.28 | 63 | 2026.07.31 |

- கேள்வி பத்திரம் விநியோகிக்கப்படும் திகதி :- 2026.05.28 –2026.06.11 (9.00 -15.30 வரை சாதாரண வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்)
- கேள்வி பத்திரம் கையளிக்கும் இறுதி திகதி :- 2026.06.12 at 10.30 hrs

Chairman,
Divisional Procurement Committee (Div.PC)/
Local Authority Procurement Committee
Nanattan Pradeshiya Sabha
Nanattan, Mannar.
2026.05.28

தொலைபேசி இலக்கம் :- 023 205 0652
தொலை நகல் இலக்கம் :- 023 205 1719
மின்னஞ்சல் :- nanattanpsabha@gmail.com

(cr.47612) (N-1)



# நெடுந்தாரகை நிலைவரம் அமைச்சர் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 29

நெடுந்தாரகைப் படகின் திருத்தப்பணிகளை, கடற்றொழில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர். நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் குறித்த படகு, கடற்படையினரால் காங்கேசன்துறையில் நிறுத்தப்பட்டு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் படகின் நிலைவரத்தை, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன், யாழ். மாநகரசபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது விரைவில் நெடுந்தாரகைப் படகு, சேவையில் இணைக்கப்படும் என்று கடற்படை அதிகாரி தெரிவித்தார். (க)



# சாவகச்சேரி நகரசபையினர் சிவாஜிலிங்கத்துக்கு நிதியுதவி

மூத்த தமிழ் தேசிய அரசியல்வாதி எம்.கே. சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைக்காக சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான தவிசாளர் சிஞீபிரகாஸ், பிரணவராஜா, ஜெயபிரதாப், விஜயலக்ட்சுமி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்களான உப தவிசாளர் கிஷோர், கோகுலராஜ் தமிழரசுக்கட்சி உறுப்பினர் பாலமயூரன் ஆகியோர் கட்சி பேதமின்றி இணைந்து ஒரு இலட்சத்துக்கு 10 ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளனர். (ச-28)

The Royal College of Jaffna
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
1. சமையல் உதவியாளர் (ஆண், பெண்)
2. பொதி செய்பவர் (ஆண், பெண்)
3. பாத்திரம் கழுவுபவர் (ஆண், பெண்)
தொடர்பு: 077 755 0008

காணிகள் தேவை
Pk Real Estates
வடமாகாணத்தில் காணிகள் உடனடியாக வாங்கப்படும் PK நிறுவனத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் காணிகள் அல்லது வீடுகள் விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ இருந்தால் உடனடியாக தொடர்புகொள்ளவும்.
021 222 1813, 071 010 0002, + 4474 8130 4127
4 / 1 Sengundha Market Kalviyankaadu, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எபோலாவைத் தடுப்பதற்கு பயணத்தடை விதித்த கனடா

றொறன்ரோ, மே 29

எபோலா வைரஸ் பரவல் காரணமாக ஆபிரிக்காவின் மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு தற்காலிக பயணத்தடையை விதிக்க கனடா அரசாங்கம்தீர்மானித்துள்ளது. கொங்கோ, உகண்டா, தெற்கு சூடான் ஆகிய நாடுகளில் வசிப்பவர்கள் நேற்றுமுன்தினம் முதல் 90 நாள்களுக்கு கனடாவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, கடந்த வாரங்களில் இந்த மூன்று நாடுகளுக்கும் பயணம் செய்த அமெரிக்கர் அல்லாத குடிமக்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கும் அமெரிக்கா கடந்த வாரம் தடை விதித்திருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்த, ஆனால் நோய் அறிகுறிகள் இல்லாத கனடியப் பிரஜைகள், நிரந்தர வதிவிட உரிமம் கொண்டவர்கள் மற்றும் பிற வெளிநாட்டவர்கள் மே 30 முதல் 21 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, அமெரிக்கா, கனடா அல்லது பஹாமாஸ் ஆகிய நாடுகளில் இது வரை எந்தவொரு எபோலா நோயாளியும் அடையாளம் காணப்படவில்லை என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்ஆசிரியர்
திருமதி
அகிலினி நிர்மலானந்தம்
அவர்களின் அன்பு மாமனார்
**அமரர்**
**ஆறுமுகம் நவரத்தினம்**
அவர்களின் பிரிவுத் துயரில்
நாமும் பங்கு கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்திபெற
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்..

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா/ வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**
**ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.**



## 2026 ஆம் ஆண்டு உயர்திருவிழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான கூறுவிலை கோருதல்

கோவிலின் 2026ஆம் ஆண்டு உயர்திருவிழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான் பொருட்கள். கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலயத்தில் கூறுவிலைப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 05.06.2026ஆம் திகதிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் மாலை 5.00 மணிக்கு முன்னர் இட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப விரும்புபவர்கள் இடது பக்க மேல் மூலையில் 2026ஆம் ஆண்டுக்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான கூறுவிலை எனக் குறிப்பிட்டு செயலாளர். அறங்காவலர் சபை. ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**அன்னையின் சேவையில்**
**திரு.க.ஜீவசீலன்**
**கௌரவ செயலாளர்**
**அறங்காவலர்சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு.**
**T.P:- 021 432 3440**

(cr.477611) N-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**23 . 05 . 1939**



**மறைவு**
**27 . 05 . 2026**

### சரவணமுத்து மனோன்மணி
### (றஞ்சி அம்மா)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மனோன்மணி அவர்கள் 27.05.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியரின் ஆசை மகளும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்து (முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம்) அன்பு மனைவியும், புஸ்பமலர் (இலங்கை), தர்மராஜா (சுவிஸ்), கலைமகள் (இலங்கை), உதயகுமாரி (சுவிஸ்), காலஞ்சென்ற உதயகுமார் (சுவிஸ்) மற்றும் ரதிகுமாரி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பசாமிகு தாயும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, குகனேசன், பராசக்தி (சுவிஸ்), குருமூர்த்தி (சுவிஸ்), கிருஷ்ணமாலா (சுவிஸ்), சுந்தரலிங்கம் (சுவிஸ்), விப்பிரவாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், செல்வலதா - ரவி, காலஞ்சென்ற செல்வக்குமார் மற்றும் லதிக்கா - கிருஷ்ணராஜ், றஜீதன், றஜீனா, கயூசன், நிவேதா - உதயவர்மன், றஜீக்கா, சாகிபன், சபீதா - ஆதவன், லபிஷா, சுகிர்தன், சுகிந்தன் - அமோடினி, சமீரா - சுவர்ணன், சமீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆருஜன், அனனியா, அகானா, அனாபிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (31.05.2026) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சுதுமலை கிழக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.61534 (N-1)

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**18 . 02 . 1948**



**மறைவு**
**27 . 05 . 2026**

### தம்பு சிவலிங்கமூர்த்தி

செம்பிகலட்டி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கமூர்த்தி அவர்கள் 27.05.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், வேலுப்பிள்ளை பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், வனசா அவர்களின் அன்புக் கணவரும், மங்களம் (கனடா), முருகேசமூர்த்தி (கனடா), பரிமளம் (இடைக்காடு), மகேசமூர்த்தி (கனடா), கணேசமூர்த்தி (கனடா), சத்தியேஸ்வரி (கனடா), நாகேஸ்வரமூர்த்தி (கனடா), சத்தியமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், கபிலராஜ் (கனடா), சஜிந்திரன் (கட்டார் - Quantity Surveyor) கோகுலராஜ் (கமநல அபிவிருத்தி திணைக்களம் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், எழிலரசி (கனடா), சுபாங்கரி (கட்டார்), விதுனா ஆகியோரின் மாமனாரும், அகரன், ஆதிரா, ஆத்விகா, ஆத்விக், அகர்வி ஆகியோரின் அன்புப் பேரனும், முருகையா (கனடா), கமலினி (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ( இடைக்காடு) மற்றும் உஷா (கனடா), பவானி (கனடா), சுப்பிரமணியம் (கனடா), சிவரூபி (கனடா), ரஜனி (லண்டன்), ஸ்ரீகாந்தன் (நெதர்லாந்து), காலஞ்சென்ற பேபி சரோசா மற்றும் விஜயகாந்தன் (நெதர்லாந்து), ரூபகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 959 5765**

(cs.61534 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நன்னீர் இறால் தொழிற்றுறை

# புதிய தொழில்நுட்பத் திட்டம் வடமாகாணத்தில் ஆரம்பம்!

கிளிநொச்சி, மே 29

நன்னீர் இறால் தொழிற்றுறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக புதிய தொழில்நுட்ப வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட 25 மில்லியன் ரூபா நிதியின்கீழ், பாரம்பரிய முறைகளை மாற்றி, தீவின் பிரதான நீர்த்தேக்கங்களை மையமாகக் கொண்டு இந்தப் புதிய தொழில்நுட்ப வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்பு மற்றும் அக்கராயன் குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் புதுமுறிப்புக் குளத்தில் கூடு மூலம் வளர்க்கப்பட்ட இறால் குஞ்சுகள் குளத்தில் நேற்று விடப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நீர்வாழ் உயிரினவளர்ப்பாளர் அஜித் சிறிகுமார, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவரின் இணைப்பாளர் மருங்கன் மோகன், நீர் உயிரினச்செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர் ம.மதுசன், மீனவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 29

போதைப்பொருள்களில் இருந்து விலகியிருத்தல் தொடர்பில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் இன்று காலை 7 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் சாவகச்சேரி மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ம-131)

**மில் தளபாடங்கள் தேவை**

நெல், தானியங்கள், தேங்காய், கொப்பறா மில் தளபாடங்கள் மொத்தமாக கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 077 772 2215

**வைகாசி விசாகப்பொங்கல் விழா**

30.05.2026



**புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்**

காலை 6.00 மணி :- திருவனந்தல் (பால்) பூஜை
காலை 7.00 மணி :- நித்திய அபிஷேகம் பூஜை
காலை 8.00 மணி :- கண்ணகை அம்மனுக்கு ஸ்நபனாபிஷேகம், பொங்கல் பூஜை.
காலை 10.30 மணி:- முருகப்பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகம், பூஜை
மதியம் 12.00 மணி:- உச்சிகால பூஜை தொடர்ந்து வசந்த மண்டபத்தில் அம்பாளுக்கு பூஜை, உள்வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். பின்னர் அடியவர்களுக்கு மகேஸ்வர பூஜையாகிய அன்னதானம் வழங்கப்படும்.
பிற்பகல் 3.30 மணி:- வைரவருக்கு விசேட அபிஷேகம், பொங்கல் பூஜை.

பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் அடியார்கள் கலந்துகொண்டு பொங்கல் பொங்கி அம்பிகையின் அருளை பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(CS/61535) J-1

**31வது நாள் நினைவலைகள்**



மலர்வு 14 . 01 . 1952

உதிர்வு 29 . 04 . 2026

அமரர்

**திருமதி அந்தோனிப்பிள்ளை கெலன்ஜெசி (ராஜினி)**

தாய்மைக்கு இலக்கணம் - நீங்கள்
அளவில்லா அன்புக்கு
பொக்கிஷம் - நீங்கள்

கண்களாய் இருந்த - நீங்கள்
எம்மைக் காத்த கடவுள் - நீங்கள்

மறக்க முடியாத நினைவு - நீங்கள்
இழக்கக் கூடாத உறவு - நீங்கள்

உங்கள் நினைவுகள் என்றும்
நீங்காத சுகங்களாக....

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/61244) J-1

**மரண அறிவித்தல்**

**கந்தசாமி சந்திரகுமார்**



தோற்றம் 16.05.1962

மறைவு 28.05.2026

மண்டைதீவை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சந்திரகுமார் அவர்கள் நேற்று (28.05.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சோதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், லலிதாம்பாள் (ராணி) இன் அன்புக் கணவரும், ஜெயகுமார், உதயகுமார், ஜெயசோதி, காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதன், சுகன்ஜா, சுரேன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிக்குமார், ராதிகா, பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜீபன், விதுஷன், நிஷாந், விதுஷிகா, கிஷானா, றொஷானா, ஆமோஷ் ஆகியோரின் அன்பு பேரனும், சக்திவேல், சண்முகவேல், செந்தில்வேல், ஞானவேல் (பிரான்ஸ்), ஜீவராணி, தனலட்சுமி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பிப்பிலி கிறிஸ்தவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/31889) J-1

**மரண அறிவித்தல்**

மண்ணில் 16 - 10 - 1973

விண்ணில் 28 - 05 - 2026



புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை கிருஷ்ணபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.விஜயவினோதினி கமலநாதன்**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், திருகோணமலை)

அவர்கள் 2026.05.28 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராஜேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்ற கமலநாதன் (நாதன்) அவர்களின் அன்பு மனைவியும், உஷாயிகன் (Resident Engineer - Singapore), தனுஜிகன் (Manager of Trinco Hybrid) ஆகியோரின் அன்புத் தாயும் சிந்துஜா (விரிவுரையாளர் Finwin Edu Campus)வின் அன்பு மாமியும், ரிதிக்ஷனின் அன்பு பேத்தியும், விஜயவிந்தன் (UK), ஜெயவிந்தன் (UK), லோகவிந்தன் (UK),சூரியவிந்தன், அமரர் சங்கீதா, நிர்மலா (Development Officer , Divisional Secretariat, Town & Gravets, Trincomalee) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவிபாரதி (UK), ரம்மி (UK), லோஜினி,முகுந்தன் (Owner of Sigma Auto Mobile, Kilinochchi and Trincomalee Hybrid) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29.05.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 03.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்புவழிபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போதைமாத்திரை....

கடத்தப்பட்டு, அவை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய கொழும்பிலிருந்து பொதிசெய்யப்பட்டு குருநகர் பகுதியிலுள்ள தபால் நிலையத்துக்கு அனுப்பப்பட்ட பொதியை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைப்பற்றி சோதனையிட்டனர். இதன்போது ஆயிரத்து 800 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன், இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த இளைஞரிடம் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கொழும்பிலிருந்து குறித்த பொதியை அனுப்பியவரைக் கைதுசெய்யும் நடவடிக்கையும் இடம்பெற்று வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன. (அ-ம-66-26-20)

## மயிலிட்டியில்...

பொதுமக்களிடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு இராணுவத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, தமது காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து இன்றையதினம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதற்காக பேருந்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
30 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தின் பிடியிலுள்ள மயிலிட்டிக் காணிகளை விடுவிக்குமாறு கடந்த மாதம் 24ஆம் திகதியிலிருந்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே ஆறாவது வாரமாக இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-26)

## மதுப்போத்தல்களுடன்...

முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நேற்று மதுபானசாலைகள் மூடப்பட்டிருந்தன. இதனால், சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக மதுப்போத்தல்களை பதுக்கி வைத்திருந்த நபரே கிளிநொச்சி தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 30 மதுப்போத்தல்கள் மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

## காற்றாலைக்கு...

இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் திட்டங்களைக் கைவிடுமாறு அந்தப் பகுதி மக்களும், சிவில் அமைப்புகளும் நீண்டகாலமாக வலியுறுத்துகின்ற போதிலும் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே நேற்றையதினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
போராட்டத்தைத் தொடர்ந்து வேரவில் மருத்துவமனைக்கு முன்பாகவிருந்து, கிராஞ்சி கற்பகப் பிள்ளையார் ஆலயம்வரை பேரணியும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-55)

## காய்ச்சல்...

பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுந்தினம் அதிகாலை அந்தச் சிசு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. எனினும் மேலதிக சிகிச்சையின்போது அன்றையதினம் இரவு அந்தச் சிசு உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## பாலியல்...

எதிராக நாடளாவிய ரீதியில் தற்போது போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று காலை 9.30 மணிக்கு இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-56-60)

## கடற்றொழிலுக்காக...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பருத்தித்துறை முனை மற்றும் கற்கோவளம் கடற்பகுதிகளில் இருந்து மீன்பிடி நடவடிக்கைக்காகச் சென்ற கதிர்காமம் சோதிலிங்கம் (வயது -52), சுமியோ பிள்ளை சுஜித்குமார் (வயது -37), பாலசந்திரமூர்த்தி இராமகிருஸ்ணன் (வயது-54) மற்றும் அவரது மகனான இராமகிருஸ்ணன் ரவிராஜ் ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.
குறித்த பகுதிகளில் கடற்றொழிலுக்காகச்சென்ற ஏனைய படகுகள் நேற்றுக் காலை கரைதிரும்பிய நிலையில், இரு படகுகள் மட்டும் கரைதிரும்பவில்லை. இதையடுத்து அவர்களைத் தேடும் பணிகளில் மீனவர்கள் துரித கதியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முற்பகலில் இருந்து இரவுவரை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போதிலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.
ஆழ்கடல் பகுதியிலிருந்து ஒருதொகுதி வலைத்துண்டுகள் உள்ளிட்ட சில மீன்பிடி உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை காணாமற்போன மீனவர்களால் எடுத்துச் செல்லப்பட்டவை என நம்பப்படுகின்றது. அத்துடன் வலைகளுடன் படகொன்று குறித்த பகுதி கடலில் மூழ்கிய நிலையில் இருப்பதாகவும் நேற்றுமாலை தெரியவந்துள்ளது. இதனால், மீனவர்களுக்கு என்ன நேர்ந்தது என அந்தப் பகுதிகளில் பெரும் பதற்றமும், பரபரப்பும் நிலவுகின்றது.
சம்பவம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர், கடற்றொழில் நீரியல் வளத்துறையின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. கடற்படைக்கும் தகவல் வழங்கப்பட்டு அவர்களின் உதவி கோரப்பட்ட போதிலும் கடற்படையினர் மிகவும் அசமந்தமாகவே செயற்பட்டனர். நேற்று மாலைவரை அவர்கள் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கவில்லை என மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். காணாமற்போன மீனவர்களின் குடும்பத்தினருடன் அவர்கள் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ-ம-100)

## வடக்குக்...

யல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் தற்போது ஆபத்தான காலநிலை நிலவுகின்றது. இந்தக் காலநிலை இன்றும் தொடரும். இதன்படி காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கடற்பரப்பில் மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்றுவீசும். புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இந்த அறிவுறுத்தல்கள் தொடர்பில் மீனவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம் -என்றுள்ளது. (அ-ம-இ)

## படகு...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
கொழும்பு செல்வதற்காக நயினாதீவு குறிகாட்டுவான் நோக்கிப் பயணிக்க விருந்த அதிபர் பயணிகள் படகைத் தவறவிட்டமையால், மீன்பிடிப் படகின் மூலம் தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளார். அவரும் இன்னும் இருவரும் அந்தப் படகில் பயணித்துள்ளனர்.
அலையுடன் படகு கோரமாக மோதுண்ட நிலையில், அதிபர் நிலை தடுமாறி கடலில் வீழ்ந்துள்ளார். அவரை உயிருடன் மீட்பதற்கு கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை. இறுதியில் சடலமாகவே அவரை மீட்க முடிந்தது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை நயினாதீவு பிராந்திய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நா. தியாகராசா மேற்கொண்டார்.
கடல் கடந்த பிராந்தியங்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பணிக்காலத்தை, வெளிமாவட்டச் சேவைக்காலமாக கருத வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேற்றுமுன்தினம் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஏனைய...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசியல் ஆதாயம் பெறுவதற்காக ஏனைய கட்சிகளை உடைத்து பெரமுனவைப் பலப்படுத்தும் நோக்கம் எமக்கு இல்லை. கடந்த காலங்களில் அத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்றதால் எமக்கு இழப்பே ஏற்பட்டது. எனவே, எதிர்வரும் காலங்களில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் என்றார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்குத் தாவுவதை குற்றமாக அறிவிக்கும் சட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## திஸ்ஸ...

ளர்களும் இணைந்து இன்றும், நாளையும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
திஸ்ஸ விகாரையை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்துக்கு முன்னைய நாளிலும், பௌர்ணமி தினத்தன்றும் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே இன்றும், நாளையும் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதன்படி, இன்று மாலை 4 மணிமுதல் 6 மணிவரையும், நாளை காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரையும் இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைக்குக் கடத்தவிருந்த 8.46 இலட்சம் மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, மே 29

மண்டபம் சீனியப்பா தர்கா தெற்குக் கடற்கரையில் இருந்து இலங்கைக்குப் படகில் கடத்துவதற்காக, வாகனத்தில் கொண்டுவரப்பட்ட 8.46 இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகள், இந்திய கடலோரக் காவல் படையினரால் கடந்த திங்கட்கிழமை பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட மாத்திரைகளை கடலோரக் காவல் படையினர், மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். தப்பியோடிய சந்தேநபர்கள் மற்றும் வாகனம் குறித்து மண்டபம் கடலோரப் பாதுகாப்புக் குழுமப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். (க)



# கிரிக்கெட் வீராங்கனைக்கு மன்னாரில் கௌரவிப்பு

மன்னார், மே 29

இலங்கை கிரிக்கெட் அணியின் ஏ பிரிவில் இடம்பிடித்துள்ள மன்னார் மாவட்டம் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் சஜிந்தினியை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை மன்னாரில் நடைபெற்றது.

பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலய பாடசாலை நிர்வாகம் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து சஜிந்தினியை வரவேற்றனர்.

மன்னார் அரச பேருந்துத் தரிப்பிடத்தில் வீராங்கனை மற்றும் விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டு இசை வாத்தியம் முழங்க மன்னார் பஜார் பகுதியூடாக மாவட்டச் செயலகம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் வீராங்கனையைக் கௌரவித்தார். தொடர்ந்து மாணவி அவரது சொந்த கிராமமான பேசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சஜிந்தினி இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏ பிரிவில் இடம்பிடித்துள்ள நிலையில் இலங்கை நியூசிலாந்து ஏ மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டியிலும் கலந்துகொண்டுள்ளார். (எ-56)



# சிவாஜிலிங்கத்தை நேரில் சந்தித்து கஜேந்திரகுமார் எம்.பி. நிதியுதவி

யாழ்ப்பாணம்,மே 29

தமிழ்த்தேசிய அரசியற்தலைவரும், வல்வெட்டித்துறை நகரபிதாவுமான எம். கே. சிவாஜிலிங்கத்தை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்றுச்சிகிச்சைகளுக்காக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் கட்சியின் ஆதரவாளர்கள் இணைந்து திரட்டிய ஒருதொகை நிதியைக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர், வவுனியா மாவட்ட அமைப்பாளர் தவபாலன் ஆகியோர் சார்பாக வழங்கிவைக்கப்பட்டது. சந்திப்பில் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோரும் உடனிருந்தனர். (ச-66)


## காணி விற்பனைக்கு

யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 1 1/2 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.

* அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
* ஒன்றரை (1 1/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
* சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
* அச்சுவேலி நகரம் 2km
* பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
* நிலாவரை கிணறு 700m தூரம்
* செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
* ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் மட்டும் (1800000/=)

தொடர்புகளுக்கு:- 077 2880 152, 076 7390 413

(CS 31891) J-1


## நீங்கா நினைவுடன்

மலர்வு 10 . 08 . 1938



உதிர்வு 29 . 05 . 2024

**அமரர் கனகேஸ்வரி நடராசா**
(கனகேஸ் ரீச்சர்)

தமிழ் பண்டிதை, English Special Trained, முன்னை நாள் ஆசிரியர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

ஆசை அம்மாவே அருவமாய்ப் போனாயோ
விடுதலை பெற்று நீ விண் மீனாய்ப் போனாயோ
பாசத்தின் ஊற்றே எம் நினைவாகிப் போனாயோ
மீண்டும் இணைந்திடுவோம் கதையல்லக் கண்மணியே!

'திருவேளகம்'
ஆசிரியர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media